வாசிக்க: லூக்கா 11:1-13

***"பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே!" (லூக் 11:2அ)***

தங்களுக்கு ஜெபிக்கக் கற்றுத்தரும்படி சீடர்கள் இயேசுவைக் கேட்டபோது அவர்கள் குறிப்பாக யாரை நோக்கி ஜெபிக்கவேண்டுமென அவர் போதித்தார்: "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே!" இது சும்மா சொல்லப்பட்ட வார்த்தைகளல்ல; திட்டமான போதனையாகும். மத்தேயு ஆறாம் அத்தியாயத்திலுள்ள இதற்கு ஒத்தவாக்கியப் பகுதிகளில் எத்தனைமுறை இயேசு "உங்கள் பிதா" எனும் சொற்றொடரைக் கூறுகிறார் பாருங்கள் (வச 1,4,6,8,14,15,18,26,32). எங்குதான், எப்பொழுதுதான், ஏன்தான் கிறிஸ்தவர்கள் இயேசுவை நோக்கி ஜெபித்து, இயேசுவின் நாமத்தில் ஜெபத்தை முடிக்கும் பழக்கத்திற்குள் சரிந்தார்களென என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை! இயேசுவின் நாமத்தில் இயேசுவிடமே கேட்க முடியுமோ? சற்றும் அர்த்தமற்றது!

தமது மரணத்தையடுத்துத் துவங்கவிருக்கும் புதிய உடன்படிக்கையின் யுகத்தைக் குறிப்பிட்டு இயேசு தம் சீடருக்கு உபதேசித்ததாவது: "அந்த நாளிலே நீங்கள் *என்னிடத்தில்* ஒன்றும் கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் என் நாமத்தினாலே *பிதாவினிடத்தில்* கேட்டுக்கொள்வதெதுவோ..." (யோ 16:23,24). கிறிஸ்து இறக்கும்வரை சீடர்கள் தங்கள் தேவைகளையெல்லாம் அவரிடம் கேட்டனர். புதிய யுகத்தின் ஜெப ஒழுங்கில் ஏற்பட வேண்டிய மாற்றத்தை இந்த வசனத்தில் "மெய்யாகவே" என்று இயேசு வலியுறுத்துவதைக் கவனியுங்கள்! ஆதிச்சீடர் பெந்தெகொஸ்தேயை அடுத்து எழுதப்பட்டுள்ள முதல் ஜெபத்தையே பிதாவை நோக்கிச் செய்தனர் (அப் 4:24-30). இதுவே பவுலின் பழக்கமாகவும் இருந்தது. "பிதாவை நோக்கி... வேண்டிக்கொள்கிறேன்" என்பதுவே அவரது அறிக்கை (எபே 3:15; 1:16,17).

பாவங்களைப் பிதாவிடமே அறிக்கையிடவேண்டும். அவ்வேளையில், "அவரது குமாரனின்" இரத்தம் நம்மைத் தூய்மைப்படுத்தும் (1 யோ 1:6-9). பிதாவிடம் நமது பாவங்களை அறிக்கையிடும்போது, குமாரனானவர் பிதாவின் வலது பக்கத்திலிருந்தும் (1 யோ 2:1; எபி 2:17,18), பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளிருந்தும் (ரோ 8:26) நமக்காகப் பரிந்து மன்றாடுகின்றனர். நாம் இத்தெய்வீக ஒழுங்கை ஜெபத்தில் ஒருபோதும் மறக்காதிருப்போம்.

ஆன்மீக ஆசீர்வாதங்கள் அனைத்தும் கல்வாரியில் கிறிஸ்து முடித்துவிட்ட பணியினால் நமக்கு வருபவைகளானாலும் அவைகளை அனுபவிக்க நாம் "பிதாவிடம்" கேட்கவேண்டுமென்றே போதிக்கப்பட்டிருக்றோம். எடுத்துக்காட்டாக, ஆவியினால் நமக்கு ஞானஸ்நானம் கொடுப்பது இயேசு என்றாலும் அந்த ஆசீர்வாதத்தைக் கேட்கவேண்டியது பிதாவிடமே (லூக் 3:16; 11:13). அப்படியானால் நாம் ஒருபோதும் இயேசுவை நோக்கி ஜெபிக்கக்கூடாதா? இல்லை. இயேசுவிடம் ஜெபிப்பது ஒரு விதிவிலக்காயிருக்கலாம், ஆனால், வழக்கமாயிருக்கக்கூடாது.

*பிதாவே, மா தயாபரா, ரட்சிப்பின் ஆதி காரணா,*
*சிம்மாசனமுன் தாழுவேன், அன்பாக மன்னிப்பீயுமேன்!* *(பாமாலை)*
— E. Cooper, *1770-1833*